DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | **SC Case No. 8/2022** |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW 7 ரவி** |
| Father's Name/ Husband name | அப்பாவு |
| Village | அணையேரி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 06.03.2024

Accused Present.

**முதல் விசாரணை**

நான் அணையேரி கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவராக இருக்கிறேன். அ.சா.1, 2 ஆகியோரை தெரியும். நான் விவசாய வேலையும் , ஊராட்சி கான்டேரக் வேலையும் செய்து வருகிறேன். அ.சா.2 பாரூக் என்பவர் என்னிடம் கான்டேரக் வேலைக்கு உதவியாளராக வேலை செய்து வருகிறார். அணையேரி மாதா கோவில் அருகில் வடிக்கால் வேலை 11.09.2021 தேதியில் நடந்தது. அப்போது வேலை சம்பந்தமாக நடராஜன், பிரேமா, ராயர் , பாரூக் , மற்றும் 13 நபர்கள் இருந்தார்கள். நான் வேலை செய்யும் இடத்தில் இருந்து செஞ்சிக்கு வந்துவிட்டேன். பின்னர் ஐயப்பன் என்பவர் வேலை செய்யும் இடத்திற்கு வந்து பாரூக் என்பவரிடம் சிமெண்ட் கேட்டதாகவும், அதற்கு பாரூக் தான் வேலை செய்வதாகவும், என்னிடம் கேட்டுக்கொள்ளுமாறும் சொல்லியுள்ளார். அதற்கு ஐயப்பன் என்பவர் கீழே கிடந்த கௌபார் என்ற ஆணி அடிக்கும் இரும்பு ராடால் பாரூக்கை அடிக்க வந்த போது பாரூக் தடுத்துள்ளார். பின்னர் ஐயப்பன் கீழே கிடந்த கட்டையை எடுத்து பாரூக்கின் மண்டையை அடித்துள்ளார். பாரூக்கிற்கு இரத்தம் வந்ததால் அனந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். பின்னர் அங்கியிருந்து செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார்கள். பின்னர் பாரூக்கை

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். மேற்படி சம்பவத்தை எனக்கு பாரூக் உடன் வந்த நடராஜன், மற்றும் மேஸ்திரிகள் எனக்கு சொன்னார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. நடராஜன், ராயார் ஆகியோர் என்னிடம் சம்பவம் குறித்து சொன்னார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் என்னை செஞ்சி அரசு மருத்துவமனையில் இருக்கும் போது என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். மற்ற சாட்சிகள் நடராஜன், பிரேமா ஆகியோரை போலிசார் விசாரித்தது எனக்கு தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கும் போது பாரூக் செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்தார். அப்போது 4 மணிக்கு மேல் இருக்கும். அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை . போலிசார் என்னை 11.09.2021 ம் தேதி விசாரித்தார்கள். நான் தி.மு.க கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். வடிகால் வேலை அரசு வேலை என்றால் சரிதான். எதிரி ஐயப்பன் கால்வாய் கட்டும் வேலை யை சரியாக சிமெண்ட் மணல் கலந்து செய்யுமாறு சொன்னதால் பாரூக் எதிரியை அடித்து காயபடுத்தி விட்டார் என்றாலும் , என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி பாரூக்யை எதிரி அடித்துவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரித்த போது எதிரி ஐயப்பன் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை வந்தாரா என்று எனக்கு தெரியாது. என்னிடம் சம்பவம் குறித்து நடராஜன், ராயார் ஆகியோர் சொன்னதாக சொல்லுவது உண்மையில்லை என்றால் பாரூக் என்பவருக்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.